**நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டம் - 2018**

---

நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்ஸின் என்ஏரீஜஎக்ஸ்ஜஎஸ் வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 05 ஆந் திகதிய பீ92 0ஏஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஆரம்ப கட்டத்தில் இலங்கைக்கு 46 இரும்பு பாலங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் கடன் பயன்பாட்டில் காணப்பட்ட சேமிப்பினை பயன்படுத்தி மேலும் 04 பாலங்கள் அதனுடன் சேர்க்கப்பட்டுமிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7,564 மில்லியனுக்குச் சமமான யூரோ 45.80 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,642 மில்லியனிற்குச் சமமான யூரோ 22.05 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு பிரான்ஸின் என்ஏரீஜஎக்ஸ்ஜஎஸ் வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை இல் தொடங்கியிருந்ததுடன் 2015 யூலையில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. இருப்பினும், காணிகள் சுவீகரிப்பானது பூர்த்தியாக்கப்பட்டிறாததுடன் செயற்திட்த்தின் நிதிக் கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தன.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 27 பாலங்களின் புனர்நிர்மான வேலைகள் ரூபா 3,084.22 மில்லியன் கிரயத்தில் 2015 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. மேலும், ஏனைய 23 பாலங்களின் புனர்நிர்மான வேலைகள் கூட 29 நாட்கள் தொடக்கம் 455 நாட்களுடனான வீச்சிலான தாமதத்துடன் ரூபா 3,395.57 மில்லியன் கிரயத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

### 2.2 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது 13 பாலங்களின் புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா 68.04 மில்லியன் தாமதக்கட்டணம் அறவிட்டிருந்த போதிலும், 10 பாலங்களின் புனர்நிர்மான வேலைகளுடன் தொடர்புபட்ட மொத்தமாக ரூபா 40.78 மில்லியன் ஒப்பந்ததாரர்களிற்கு கால நீடிப்பை அனுமதிப்பதனூடாக 2018 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிர்வாகத்தின் மீது பலவீனமான கட்டுப்பாடுகள். | இருக்கும் விபரங்களின் பிரகாரம், 50 பாலங்களில் 17 பாலங்களின் புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்கள் கால நீடிப்பினை வழங்கியிருந்தனர். அதற்கு மேலதிகமாக, 13 ஒப்பந்ததாரர்களிற்கு தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. இருப்பினும், பணிப்பாளர் அதிபதியின் அனுமதியினூடாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையானது மொத்தமாக ரூபா 40.78 மில்லியன் தாமதக் கட்டணங்களை கழித்திருந்ததுடன் உரிய ஒப்பந்ததாரரிற்கு விடுவிக்கப்பட்டுமிருந்தது. | தாமதத்தினை குறைப்பதற்கும் ஒப்பந்ததாரரின் கால நீடிப்பிற்கான வேண்டுகோளை குறைப்பதற்கும் புனர்நிர்மான வேலைகள் மீது முறையான கண்காணிப்பொன்று பின்பற்றப்படல் வேண்டும். |

**2.3 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 305 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனவே, காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழான அறிவிப்புக்கள் 62 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 58 காணித்துண்டுகளிற்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21 மில்லியன் இழப்பீட்டு தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 03 காணித்துண்டுகள் மாத்திரமே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகளை நீடிப்பதற்கான சாத்தியம். | பிரிவு 44 (1) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து 62 துண்டுகளிற்கும் வழங்கப்பட்டிருந்தது. அந்த விடயம் தொடர்புடைய பிரதேச செயலாளர்களுடன் இணைந்து தெளிவாக கண்காணிக்கப்படுகின்றது. | பிரதேச செயலாளர்களுடன் முறையான ஒருங்கிணைப்பை பேண வேண்டியதுடன் செயற்பாடுகளை முறையாக கண்காணிக்கவும் வேண்டும். |